**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்**
**டிஜிட்டல் பொருளாதார அமைச்சு**
**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்**

# விலைமனு கோரல் (IFB)

## நாடளாவிய ரீதியில் உள்ள பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள பிரிவுகளில் (DRP Units) உள்ள 672 எண்ணிக்கையான Fujitsu ஸ்கேனர்களுக்கான ஒரு வருடத்திற்கான சேவையும் பராமரிப்பும் விலைமனு அறிவித்தல்

## IFB இலக்கம் : DRP/ACC/07/51/2025

1. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவர், நாடளாவிய ரீதியில் உள்ள பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள பிரிவுகளில் உள்ள 672 எண்ணிக்கையான Fujitsu ஸ்கேனர்களுக்கான ஒரு வருடத்திற்கான சேவை மற்றும் பராமரிப்புக்காக தகுதியும் தகைமையும் உடைய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகிறார்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB) நடைமுறையின் மூலம் நடத்தப்படும்.

3. ஆர்வமுள்ள மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்காளரிடம் 011-5226172 என்ற இலக்கத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை 19.11.2025 முதல் 08.12.2025 வரை பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூதிபுர வீதி, "சுஹுருபாய", 12வது மாடி, சி பிரிவில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் கட்டணமின்றி பார்வையிடலாம், அத்துடன் திணைக்களத்தின் இணையதளத்திலும் (www.drp.lk) பார்வையிடலாம்.

4. ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுப்பினை, ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து, 19.11.2025 முதல் 08.12.2025 வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை, மீளப்பெற முடியாத கட்டணமான ரூபா ஐயாயிரத்தை (ரூ. 5,000/-) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

5. விலைமனுக்கள் "அசல்" (Original) மற்றும் "பிரதி" (Copy) எனக் குறிக்கப்பட்ட இரண்டு பிரதிகளாக, ஒரே முத்திரையிடப்பட்ட உறையில் பந்தி 3 இல் சுட்டிக்காட்டப்பட்ட முகவரிக்கு கையளிக்கப்படல் வேண்டும் அல்லது பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூதிபுர வீதி, "சுஹுருபாய", 12வது மாடி, சி பிரிவில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் 09.12.2025 அன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் வைப்பிலிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து எழுபத்து ஏழு (77) நாட்கள் வரை அல்லது கொள்வனவாளரால் நீடிக்கப்பட்ட திகதி வரை செல்லுபடியாகும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்ட உடனேயே, வருகை தர விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

6. விலைமனு உறையின் மேல் இடது பக்க மூலையில் ஒப்பந்தத்தின் பெயரும் விலைமனு அறிவித்தல் இலக்கமும் (IFB Number) குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அனைத்து விலைமனுக்களுடனும் இலங்கையில் இயங்கும் ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட ரூபா மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் (ரூ. 340,000/-) பெறுமதியான விலைமனுப் பிணை (Bid Security) ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அசல் விலைமனுப் பிணை வழங்கப்படல் வேண்டும்.

7. வெற்றியீட்டிய விலைமனுதாரர் 14.01.2026 ஆந் திகதியிலிருந்து சேவையை ஆரம்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்,**
**12வது மாடி, "சுஹுருபாய",**
**ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

SELACINE MEDIA SOLUTIONS